# 26-01-2025 செய்தி

## ஸ்டார்கேட்: அமெரிக்காவின் மெகா ஏ.ஐ., திட்டம்

**ஸ்டார்கேட் என்பது என்ன?**

- ஓபன் ஏ.ஐ., ஆரக்கிள், சாப்ட்பேங்க் ஆகிய மூன்று நிறுவனங்கள் இணைந்த கூட்டு நிறுவனம் தான் இது. இதன் நிதித் தேவைக்கான பொறுப்பை சாப்ட்பேங்க் ஏற்கும்.
- இயக்கம், ஆராய்ச்சியை ஓபன் ஏ.ஐ., நிர்வகிக்கும், தொழில்நுட்ப ஆதரவை ஆரக்கிள் வழங்கும்.

**எங்கு செயல்படும்?**

- ஏற்கனவே நிறைய தரவு மையங்கள் செயல்படும் டெக்சாசில், ஸ்டார்கேட் தன் பணியை துவங்கும். முதல் கட்டமாக 10 தரவு மையங்கள் புதிதாக அமைக்கப்படும்.
- படிப்படியாக 20 ஆக அவை அதிகரிக்கப்படும். ஒவ்வொரு மையமும் 5 லட்சம் சதுர அடியில் அமையும். மற்ற பகுதிகளில் தரவு மையங்களை அமைக்கவும் பரிசீலிக்கப்படும்.

**என்ன நோக்கம்?**

- செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை மருத்துவ மறுமலர்ச்சிக்கு பயன்படுத்துவதே தலையாய நோக்கம். சாதாரண ரத்தப் பரிசோதனை வாயிலாக புற்றுநோயை கண்டறிதல், மரபணு தொடரை அறிந்து, கட்டியின் மரபணுவை உடைக்க தடுப்பூசி அளிப்பது, ரோபோ தொழில்நுட்பத்தில் 45 மணி நேரத்தில் புற்றுநோய் சிகிச்சை என நீள்கிறது பட்டியல்.

**வேறு பயன்கள்?**

- ஸ்டார்கேட் ஏ.ஐ., தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள், அமெரிக்கர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும், பல்வேறு தொழில்நுட்ப பிரச்னைகளுக்கு தீர்வளிக்கும் என சாப்ட்பேங்க் தலைமை செயல் அதிகாரி மசாயோஷி சன் தெரிவித்தார்.
- இதே கருத்தை, ஓபன் ஏ.ஐ., நிறுவனத் தலைவர் ஆல்ட்மேன், ஆரக்கிள் நிறுவனர் லேரி எலிசன் ஆகியோரும் வழிமொழிந்துள்ளனர்.

**எவ்வளவு வேலைவாய்ப்பு?**

- ஸ்டார்கேட் ஏ.ஐ., வாயிலாக, ஒரு லட்சம் அமெரிக்கர்களுக்கு வேலை கிடைக்கும் என டிரம்ப் அறிவித்துள்ளார். தரவு மையங்களைச் சுற்றி வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் புதிதாக வேலைவாய்ப்புகள் உருவாகிக் கொண்டே இருக்கும் என்றார் அவர்.
- கட்டுமானம், இயக்கம் மற்றும் ஆய்வு, தகவல் சேகரிப்பு, தரவு பராமரிப்பு என எண்ணற்ற பிரிவுகளில் வேலை கிடைக்கும் என்பது எதிர்பார்ப்பு.

**இந்தியாவுக்கு என்ன பயன்?**

- ஸ்டார்கேட் திட்டத்தால், இந்தியாவுக்கு பலமான போட்டியும் சவாலும்தானே தவிர, நேரடி பயன் ஏதுமில்லை, ஓபன் ஏ.ஐ., ஆரக்கிள், சாப்ட்பேங்க் கூட்டு மட்டுமின்றி என்விடியா, மைக்ரோசாப்ட், ஆர்ம் ஆகிய முன்னணி நிறுவனங்களும் ஸ்டார்கேட் திட்டத்தில் பங்களிக்க உள்ளன.
- இவை, ஏ.ஐ., தொழில்நுட்ப வளர்ச்சியில் அமெரிக்காவை விரைவுபடுத்தும் என்பதால், அவற்றுடன் போட்டியிடும் சவாலை இந்தியாவுக்கு ஏற்படுத்தும்.
- அதேநேரம், ஏற்கனவே ஏ.ஐ., தொழில்நுட்ப பயன்களை அதிகம் பயன்படுத்த முயற்சிக்கும் இந்தியா, அதன் இலக்குகளை மேலும் விரிவாக்க, அமெரிக்காவின் ஸ்டார்கேட் திட்டம் தூண்டுதலாக அமையும் என்கிறார்.
- அட்வான்டேஜ் கிளப், ஏ.ஐ., நிறுவன இணை நிறுவனர் ஸ்மிதி பாட் தியோரா.
- ஸ்டார்கேட் ஏ.ஐ., திட்டத்துக்கு திறமையான பணியாளர்கள் எங்கிருந்து கிடைப்பர்? அதிகம் பேர் இந்தியர்களாகவே இருப்பர் என்பதால், வேலைவாய்ப்பு கிடைக்கும்.
- அதோடு, 10,000 கோடி ரூபாயில் ஏ.ஐ., வளர்ச்சி திட்டத்தை நாம் அமல்படுத்தினாலே போதும் என்கிறார், ஏ.ஐ., அண்டு பியாண்டு நிறுவன இணை நிறுவனர் ஜஸ்பிரீத் பிந்த்ரா.